# இருதய துடிப்பை நிறுத்தாமல் 150 பைபாஸ் அறுவை சிகிச்சை

# கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனை சாதனை



கோவை : கோவை மெடிக்கல் சென்டர் அண்டு ஹாஸ்பிடல் (கே.எம்.சி.எச்) இருதய வியல் துறையின் கார்டியாக் சர்ஜரி சிகிச்சை குழுவினர் 150 நோயாளிகளுக்கு இருதய துடிப்பை நிறுத்தாமல் செய்யப்படும் ஆஃப் பம்ப் பைபாஸ் அறுவை சிகிச்சை களை வெற்றிகரமாக செய்துள் ளனர். இக்குழுவின் அறுவை சிகிச்சை நிபுணர் பேராசியர் டாக்டர். நந்தகுமார் தலைமையில், தொடர்ச்சியாக 5 மாதங் களில் 100 சதவிகிதம் வெற்றிகரமாக 150 நோயாளிகள் குணமடைந்துள் ளனர். இவ்வகளில் சில அவசர சிகிச்சையாகவும் செய்யப்பட் டவை.

மேற்கத்திய நாடுகளில் கூட இருதய துடிப்பை நிறுத்தாமல், இது போன்ற கொரோனரி ஆர்டரி பைபாஸ் டிராபட்ஸ் எனப்படும். அரிய வழிமுறை சிகிச்சை முறை 10 முதல் 20 சதவிகிதம் தான் மேற்கொள்ளப்படுகின்றன. காரணம் இது மிகுந்த நிபுணத்துவம் கோரும் சிகிச்சையாகும்.

1997 முதல் கோவை கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரியில் இத்தகைய அரிய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறுநீரகக் கோளாறால் டயாலிசிஸ் மேற் கொள்ளும் நோயாளிகள், ரத்தத்தை தமனிக்குள் செலுத்தும் இருதயத்தின் கீழ் அறையில் இடதுபுறம் பழுதானவர்கள், தீராத இருதய நோயாளிகள், சமீபத்தில் ரத்தநாள அடைப்பு ஏற்பட்டவர்கள் ஆகியோருக்கும் இம்முறையில் பைபாஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஸ்டெபிலைசர்கள் மற்றும் இருதய பொசிஸனர்ஸ் எனும் நவீன உபகரணங்களின் உதவியால் இம்முறை மூலம் வெற்றி பெற முடிகிறது. மருத்துவ உலகில் இது ஒருவகையில் புரட்சிகரமானது.

இருதய அறுவை சிகிச்சை டாக்டர்கள் ஸ்ரீநாத், கிருஷ்ண கிஷோர், கிருஷ்ணா னந்த், மயக்க மருந்து டாக்டர்கள் எம்.கே. சிவக்குமார், ஆப்ரகாம் ஜெரால்டு ஹென்றி, சிவக்குமார் மற்றும் திறமை யான தியேட்டர் செவிலியர்கள் சிகிச் சைக்குப் பிந்திய பராமரிப்பு செவிலியர்கள் ஆகியோர் டாக்டர் நந்தகுமாரின் குழுவில் உள்ளனர். இருதயத்திற்கு ரத்தத்தை செலுத்தும் குழாய்களின் சுவர்களில் கொழுப்பு படிந்து குழாய்களில் சுருக்கம் ஏற்படுவதால், ஆக்ஸி ஜன் நிறைந்த ரத்தம் இருதயத்திற்கு செல்வது தடைபடுவதை கொரோனரி இருதய நோய் என்கிறோம். நாளடைவில் ரத்தநாளத்தில் கட்டி யாகி, ரத்த ஓட்டமே தடைபடும். ரத்த நாளங்கள் சிதையவும் செய்யும். இந்நிலை யில் நோயாளி களுக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை தேவைப்படும்.

இருதயத்திற்கு ரத்தம் செல்வது மிகவும் குறையும் போது. ஆபத்தான கட்டமாகிவிடும். ரத்தகசிவு, பக்கவாதம் சிறுநீரக பாதிப்பு, உணர்விழத்தல் ஆகிய சிக்கல்கள் ஏற்படும். இந்த நிலை நோயாளிகளுக்கு, இருதய துடிப்பை நிறுத்தாமல் மேற்கொள்ளப்படும்

இந்த ஆஃப் பம்ப் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்வதே நல்லது. இருதய நுரையீரல் இயக்க கருவிகளின் உதவியால் இந்த சிகிச்சை பாதுகாப்பாக செய்யப்படுகிறது.

உடலுக்கு வெளியே ரத்த ஓட்டத்தை வைத்துக் கொள்ளாமல், இருதயத்திலோ, பெரும் ரத்த நாளங்களிலோ டியூப் இணைக்காமல் செய்யப்படுவதால் ரத்தம் செலுத்துதல் மற்றும் செயற்கை பாதுகாப்பு கருவிகள் தேவையில்லை.

டாக்டர் நந்தகுமார் குழு வினர் அர்ப்பணிப்பு உணர்வோடு கூடிய இந்த அரிய முறை ஆஃப் பம்ப் அறுவை சிகிச்சையில், நோயாளிகளின் இறப்பு விகிதம் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கிறது.